1. தாவிப் பாயும் தங்கக் குதிரை

2. கள்வர் குகை

(சிறுவர்களுக்கான சிறுகதைகள்)

ஆசிரியர்: பாவலர் நாரா. நாச்சியப்பன்

1. tAvippAyum tangkak kutirai

2. kaLvar kukai (Short Stories for Children)

by nArA nAcciyappan

In tamil script, unicode/utf-8 format


**Acknowledgements:**

Our Sincere thanks go to Tamil Virtual Academy for providing a scanned PDF of this work.

This etext has been prepared using Google OCR online tool and subsequent proof-reading of the output file.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.



**© Project Madurai, 1998-2020.**

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.

Details of Project Madurai are available at the website

https://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

## 1. தாவிப் பாயும் தங்கக் குதிரை
## (சிறுவர்களுக்கான சிறுகதை)
## ஆசிரியர்: பாவலர் நாரா. நாச்சியப்பன்

### Source:

தாவிப் பாயும் தங்கக் குதிரை (fairy tales)
ஆசிரியர்: நாரா நாச்சியப்பன்
வெளியீடு: தமிழாலயம், 137, ஜானி ஜான்கான் தெரு, சென்னை-600 014
ஜூலை 1985 வெளியீடு, விலை ரூ. 4.00

-----------

## பதிப்புரை

பொதுவாகவே தேவதைக் கதைகளும் மாய மந்திரக் கதைகளும் சிறுவர் உள்ளத்தைக்கவர்ந்து விடுகின்றன. சிறுவர்களின் இந்த மனவியல்பைக் கண்டுதான் பல சான்றோர்கள், சிறுவர்களுக்கு எதையும் சொல்ல வேண்டுமானால், தேவதைக் கதைகளின் மூலம் சொல்லுவது சிறந்தது என்று இந்த முறையைப் பின்பற்றினார்கள்.

'தாவிப் பாயும் தங்கக் குதிரை' என்ற இக் கதை அத்தகைய சிறந்த கதைகளிலே ஒன்று. ஆங்கிலத்தில் உள்ள ஒரு கதையைத் தழுவி இதை எழுதியிருக்கிறார் திரு. நாரா நாச்சியப்பன். அவர் சிறுவர்களுக்காகத் தமிழில் சிறந்த பல நூல்கள் எழுதியிருக்கிறார். தமிழ்நாட்டில் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு வழி வகுத்துக் கொண்டுவரும் பலருள் திரு நாரா. நா. அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார். அவருடைய தங்கு தடையின்றிச் செல்லும் தமிழ் நடை மாணவர்களின் மொழி வளர்ச்சிக்கும் அறிவு முதிர்ச்சிக்கும் பெரிதும் உதவும் என்று நம்புகிறோம்.

தமிழாலயம்

------

## தாவிப் பாயும் தங்கக் குதிரை

**அரசி முகிலி**

முன்னொரு காலத்தில் இன்பவள நாடு என்று ஒரு நாடு இருந்தது. அந்த இன்பவள நாட்டை அரசு புரிந்த மன்னன் ஒரு பெரிய வீரன். அவன் மனைவியோ சிறந்த அழகி. அந்த அழகரசியின் பெயர் முகிலி. அழகிய கருங் கூந்தலும், செக்கச் சிவந்த உடலும்

சேர்ந்தாற்போல் பார்க்கும்போது, மாலையில் கதிரவன் ஒளிபட்டுப் பளபளக்கும் மேகத்தைப் போலிருக்கும். முகிலி என்றால் மேகத்துக்கு உரியவள் என்று பொருள்படும். அரசி முகிலிக்கும் கார்மேகங்களுக்கும் எப்படியோ ஒரு தொடர்பு இருந்தது.

கார் மேகங்கள் அடர்ந்து, மழை பொழியும் கார்காலத்தில் அரசி முகிலியைப் பார்த்தால் தளதளவென்று பூரித்து அழகாயிருப்பாள். பொட்டு மழைகூடப் பெய்யாத முதுவேனிற் காலத்தில், வானில் தென்படுகின்ற ஒன்றிரண்டு மேகங்களும் வெளுத்துப் போய் இருப்பது போல் அவளும் முகம் வெளுத்து உடல் மெலிந்து காணப்படுவாள். அப்போது அரசி முகிலியைப் பார்த்தால் துயரமே வடிவெடுத்து வந்ததுபோல் இருக்கும்.

துயரத்தை இனித் தாங்க முடியாது என்ற நிலைவரும்போது, அவள் தன் நாட்டை விட்டுப் போய் விடுவாள். மேகங்கள் கூடிக் கருத்து மழை கொட்டும் வேறு நாடுகள் நோக்கிப் போய் விடுவாள் என்று மக்கள் பேசிக் கொள்வார்கள். கார் காலத்தில் தான் அவள் திரும்பவும் தன் நாட்டுக்கு வருவாள். அவளுக்கு ஆணும் பெண்ணுமாக இரண்டு குழந்தைகள் இருந்தார்கள்.

அரசி முகிலியின் மகன் பெயர் வில்லழகன். இளவரசியின் பெயர் பொன்னழகி. அவர்கள் இருவரும் தங்கள் தாய் அருகில் இருக்கும் போது இன்பமாக ஓடியாடி விளையாடுவார்கள். அவள் பிரிந்து சென்ற பிறகு, ஒருவரையொருவர் பார்த்து அழுதுகொண்டும் பெருமூச்சு விட்டுக் கொண்டும் ஏக்கத்தோடு இருப்பார்கள்.

**மாயக்காரி வசீகர சுந்தரி**

இன்பவள நாட்டின் அரசர், அரசி முகிலியைத் திருமணம் செய்துகொண்டு வாழ்க்கை நடத்தத் தொடங்கியபோது, அவள் பிரிவைப் பொறுத்துக் கொண்டார். ஆனால் மீண்டும் மீண்டும் ஒவ்வோர் ஆண்டும் அவள் பிரிந்து சென்றதை அவரால் பொறுக்க முடியவில்லை. அதுவே நாளடைவில் அவள்மீது வெறுப்பாக மாறிவிட்டது.

அந்த ஊரில் வசீகர சுந்தரி என்று ஒருத்தி இருந்தாள். அவள் அந்த நாட்டைச் சேர்ந்தவள் அல்ல. வடக்கே மிகத் தொலைவில் இருக்கும் ஒரு நாட்டிலிருந்து வந்தவள். அவள் மிக அழகானவள். அரசர் உலாவரும்போது ஒரு நாள் வசீகர சுந்தரியைக் கண்டுவிட்டார். அவள் அழகு அவரை மயக்கமடையச் செய்தது. வசீகர சுந்தரி

சாதாரணப் பெண் அல்ல. அவள் ஒரு மாயக்காரி. அரசர் தன்னை விரும்புகிறார் என்று தெரிந்து கொண்டவுடன் அவள் அவரைத் திருமணம் செய்துகொண்டுவிடவேண்டும் என்று திட்டமிட்டாள். அரசி முகிலி இல்லாத நாட்களில் அடிக்கடி அரண்மனைக்குப் போய் வந்தாள். தன்னுடைய மாயவித்தைகளைக் காட்டி அரசரை மயக்கினாள். கடைசியில் அரசி முகிலி இல்லாதபோது, அரசர் அவளை மறுமணம் செய்து கொண்டுவிட்டார். மாயக்காரியை அரசர் மணம் புரிந்தது, அந்த நாட்டு மக்களையெல்லாம் வெறுப்படையச் செய்தது.

எங்கிருந்தோ வந்த அவள் இன்பவள நாட்டின் அரசியாகி விட்டாள். அரசியானவுடன் அவள் அரண்மனையிலேயே தங்கினாள். அவளுக்கு இளவரசன் வில்லழகனையும், இளவரசி பொன்னழகியையும் பார்க்கவே வெறுப்பாயிருந்தது. அவர்கள் நல்ல பிள்ளைகளாய் இருப்பதைக் கண்டு அவள் கோபித்துக் கொண்டாள். அவர்கள் அழகாய் இருப்பதைக் கண்டு அவள் அருவெறுப்புக் கொண்டாள். எப்போதும் அவர்கள் உண்மை பேசுவதைக் கண்டு எரிந்து விழுந்தாள். அவர்கள் சிரித்து விளையாடுவதைப் பார்த்து அவளால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

அவர்களை அடித்து உதைத்து அடிமைகளைப்போல் வேலை வாங்கினாள். கடுகடுத்துப் பேசி அவர்களைக் கண்கலங்க வைத்தாள். கடைசியில் அவர்கள் உடுத்தியிருந்த பட்டாடைகளைப் பறித்துக் கொண்டு அரண்மனையை விட்டே விரட்டிவிட்டாள்.

**பஞ்சம், பசி, பட்டினி**

தன்னந்தனியாகச் சென்று கொண்டிருக்கும் அந்தச் சின்னஞ்சிறு பிள்ளைகளை ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஓர் இடையன் கண்டான். அவர்கள் மேல் இரக்கம்கொண்டு, அவன் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். கஞ்சியும் கூழும் ஊற்றி அவர்களை வளர்த்து வந்தான். அன்புள்ளங் கொண்ட அந்த இடையனுக்கு ஆடுமேய்க்கும் வேலையில் அவர்கள் ஒத்தாசையாக இருந்தார்கள்.

ஒரு மலைக்குன்றின் அடிவாரத்தில் அவர்கள் ஆடுமேய்க்கும் பச்சைப் புல்வெளி-யிருந்தது. ஆட்டுக் குட்டிகளோடு போட்டி போட்டுக்கொண்டு கள்ளமில்லாத உள்ளங் கொண்ட அந்தச் சிறு பிள்ளைகள் ஓடியாடி விளையாடுவார்கள். கஞ்சி குடித்தாலும் அவர்கள் நெஞ்சில் இன்பம் நிறைந்திருந்தது. மாயக்காரியின் கொடுமைகள் இல்லாத அந்த மலையடிவாரம் அவர்களுக்கு மகிழ்ச்சி தரும் இடமாக இருந்தது.

அம்மா அருகில் இல்லையே என்ற ஒரு துன்பத்தைத் தவிர வேறு எவ்விதத் துன்பமும் இல்லாமல் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

நாட்டை விட்டுப்போன அரசி முகிலி, திரும்பி வரவேயில்லை. தானிருக்க வேண்டிய இடத்தில் ஒரு மாயக்காரி இருக்கிறாள் என்று கேள்விப்பட்டுத்தான் அவள் திரும்பி வரவில்லை என்று மக்கள் பேசிக் கொண்டார்கள்.

காலம் மாறியது. கார் காலம் வந்தது. ஆனால், கார்மேகங்கள் வானில் கூடவில்லை. கோடை காலத்தினும் கொடுமையாக வெயிலடித்தது. நாளாக நாளாக வெயிலின் கடுமை ஏறிக்கொண்டு போனதே தவிர ஒரு துளி மழைகூட வரவில்லை, அரசி முகிலிக்குக் கோபம் வந்து விட்டதால் தான் மேகங்கள் கூடவில்லை என்று மக்கள் பேசிக் கொண்டார்கள்.

பஞ்சம் நீடித்தது. வயல்கள் விளையவில்லை. மரங்களும் செடி கொடிகளும் கருகிப் போயின. உணவு ஒன்றும் இல்லாமல் மக்கள் வாடினார்கள். பட்டினிச் சாவு அதிகரித்தது.

தெய்வங்களுக்கு ஏதோ கோபம் ஏற்பட்டு விட்டது என்று அரசன் நினைத்தான். பக்கத்து நாட்டிலே ஒரு பெரிய மடாதிபதி இருந்தார். அந்த மடாதிபதி தெய்வங்களோடு அடிக்கடி பேசுவார் என்று அரசன் கேள்விப்பட்டிருந்தான். அவருக்கு முன் காலத்தையும் பின் காலத்தையும் அறியக்கூடிய சக்தி இருந்ததென்று அரசனிடம் பலர் கூறியிருந்தார்கள். ஆகவே, அரசன் தன் அதிகாரிகள் சிலரை அந்த மடாதிபதியிடம் அனுப்பினான். தன் நாட்டில் மழை பொய்த்துப் போனதற்குக் காரணம் என்ன என்றும், அதற்கு மாற்றுக் கழுவாய் என்ன என்றும், கேட்டறிந்து வரும்படி அவன் அந்த அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டான்.

இதையறிந்த வசீகர சுந்தரி ஒரு தந்திரம் செய்தாள். மடாதிபதியிடம் அனுப்பப்பட்ட அதிகாரிகளை அவள் தனியாகச் சந்தித்தாள். அவர்களுக்கு நிறையப் பொன்னும் பொருளும் தருவதாகச் சொல்லி, அவர்களை மடாதிபதியிடம் போகாமல் இருக்கும்படி கேட்டுக் கொண்டாள். அவர்கள் அவள் திட்டத்துக்கு ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் வேறு எங்காவது போய்த் திரும்பி வந்து, மழை பெய்யாமல் இருப்பதற்குக் காரணம் வில்லழகனும் பொன்னழகியும் உயிருடன் இருப்பதுதான் என்றும், அவர்களைக்

கொன்றால், தெய்வங்களின் கோபம் தீர்ந்து மழை பொழியும் என்றும் மடாதிபதி கூறியதாகக் கூறவேண்டும் என்றும் அவள் தன் திட்டத்தை விளக்கினாள்.

ஆசைபிடித்த அந்த அதிகாரிகள் அவ்வாறே செய்தார்கள். அரசாங்கச் செலவில் உல்லாசமாகப் பல ஊர்களில் சுற்றித் திரிந்து விட்டுத் திரும்பி வந்தார்கள். வில்லழகனையும் பொன்னழகியையும் வெட்டிப் பலியிட்டால் தான் தெய்வ கோபம் தீர்ந்து, மழை பொழியும் என்று மடாதிபதி கூறியதாகச் சொன்னார்கள்.

மூட நம்பிக்கையுடைய அந்த அரசன் அவர்கள் கூறியதை உண்மை என்று நம்பினான். ஆனால், தன்மக்களைத் தானே எப்படிக் கொன்று பலியிடுவது என்று தயங்கினான். ஆனால் வசீகர சுந்தரி அவனுடன் பல விதமாய்ப் பேசி அந்தச் சிறு பிள்ளைகளைத் தெய்வபலி கொடுப்பதற்கு அரசன் ஒப்புக் கொள்ளும்படி செய்து விட்டாள்.

**பச்சைக் குழந்தைகள் பலி**

ஒரு நாள் காலை நேரம். கோயில் வாசலில் இருந்த பலிபீடம் பூமாலைகள் இட்டு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இளவரசனும் இளவரசியும் கழுத்தில் மஞ்சள் துண்டும் கதம்ப மாலையும் கட்டிய கோலத்தில் பலியாடுகள்போல் கொண்டு வரப்பட்டார்கள்.

பழி பாவம் அறியாத இரண்டு பிள்ளைகளைப் பலிகேட்ட ஒரு தெய்வமும் தெய்வமா என்று அவர்கள் தெய்வத்தின் பேரிலேயே வெறுப்புக் கொண்டார் கோயிலில் தேவதைகளுக்குப் பூசை நடந்தது.

பூசை முடிந்தவுடன் பூசாரி கையில் அரிவாளுடன் வெளியில் வந்தான். இரண்டு மூன்று ஆட்கள் இளவரசனையும் இளவரசியையும் பலிபீடத்தின் மேல் ஏற்றி நிற்க வைத்தார்கள். பூசாரியும் பலிபீடத்தின் மேல் ஏறினான். வானத்தை நோக்கி,

“தேவர்களே, நீங்கள் விரும்பிய பலியை ஏற்றுக் கொள்ளுங்கள் நாட்டைச் செழிக்கச் செய்யுங்கள்! அற்ப உயிர்களாகிய எங்கள் மேல் உள்ள வெறுப்பையகற்றி உங்கள் அன்பைப் பொழியுங்கள்!” என்று கூவினான்.

**வந்தது வந்தது தங்கக் குதிரை**

அப்போது வானில் ஓர் இடி முழக்கம் கேட்டது. கண்ணைப் பறிக்கும் ஒரு மின்னல் பளிச்சிட்டது. அந்த மின்னலைத் தொடர்ந்து ஓர் இறக்கை முளைத்த தங்கக் குதிரை, தரையை நோக்கித் தாவிப் பாய்ந்து பறந்து வந்து கொண்டிருந்தது. அந்தத் தங்கக் குதிரை பலிபீடத்தின் மீது வந்து இறங்கித் தன் பின்னங்காலால் பூசாரியை ஓர் உதை உதைத்துக் கீழே தள்ளியது.

அந்தத் தங்கக் குதிரையைக் கண்டவுடன் இளவரசன் வில்லழகன் அதன் முதுகில் பாய்ந்து ஏறினான். தன் தங்கை பொன்னழகியையும் கையைப் பிடித்து இழுத்துத் தூக்கித் தனக்குப் பின்னால் உட்கார வைத்துக் கொண்டான். அவர்கள் இருவரும் ஏறிக் கொண்டதும் அந்தத் தங்கக் குதிரை இறக்கைகளை அசைத்து அசைத்துக்கொண்டு மேலெழும்பிப் பறந்தது. கீழே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்த மக்கள், அரசனையும் மாயக்காரி வசீகர சுந்தரியையும் பழித்துப் பேசிக் கொண்டும், அந்த அருமைக் குழந்தைகளைக் காப்பாற்றிய தெய்வங்களைப் புகழ்ந்து போற்றிக் கொண்டும் தங்கள் தங்கள் வீடு நோக்கிக் கலைந்து சென்றார்கள்.

அரசி முகிலி, தன் குழந்தைகளைப் பிரிந்து சென்றாலும் அவர்களைக் கவனிக்காமல் விட்டுப் போய்விடவில்லை. அவள் மேலேயுள்ள மேகமண்டலத்திலிருந்து அவர்களைக் கவனித்துக் கொண்டு தான் இருந்தாள். அவள் தான் கடைசி நேரத்தில், மேகமண்டலத்தில் இருந்த தங்கக் குதிரையை யனுப்பித் தன் குழந்தைகளைக் காப்பாற்றினாள்.

**தேன்கதலி நாடு**

இரண்டு குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு அந்தத் தங்கக் குதிரை காற்றினும் வேகமாகப் பறந்து சென்றது. காடும் மேடும் கடலும் மலையும் மாறி மாறிக் கடந்து மிகத் தொலைவில் உள்ள தேன்கதலி நாட்டில் போய் இறங்கியது. அங்கு இறங்கியவுடன் நெடுந்தூரம் பறந்து வந்த களைப்பில் அந்தக் குதிரை சோர்ந்து விழுந்தது. அப்படியே அதற்கு மூச்சு நின்று அது இறந்து போய் விட்டது. வில்லழகன், அதை ஒரு மரத்தடியில் நிறுத்திவைத்து, அதற்கு ஒரு வேதாளத்தைக் காவல் வைத்தான்.

தேன்கதலி நாட்டு அரசனுக்கு ஆண் பிள்ளைகள் கிடையாது. அவனுக்கு மகள் ஒருத்திமட்டும் இருந்தாள். தேன்கதலி நாட்டு அரசன் வில்லழகனையும் பொன்னழகியையும் விரும்பி வரவேற்றுத் தன் அரண்மனையிலேயே வளர்த்து வந்தான். வில்லழகன் ஆற்றலும் வீரமும் மிகுந்த இளைஞனாக மாறியவுடன்

அவனையே தன் நாட்டின் அரசனாகப் பட்டம் சூட்டி அவனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்தான். பொன்னழகியையும் அருகில் இருந்த ஒரு நாட்டின் இளவரசனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

வில்லழகன் தேன்கதலி நாட்டைச் சீரும் சிறப்புமாக அரசு புரிந்தான். அவனுக்குப் பின் அவன் வழியில் வந்த மக்களும் பேரரும் தொடர்ந்து அரசாண்டு வந்தார்கள். பிற்காலத்தில் அந்த நாட்டில் இருந்த தங்கக் குதிரை உலகத்துப் பெருஞ் செல்வங்களிலே ஒன்றாக மதிப்பிடப்பட்டது.

**வெற்றி வேலன்**

வில்லழகன் இறந்து பலப்பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. அப்போது உலகின் வேறொரு பகுதியில் இருந்த ஒரு நாட்டையாண்ட மன்னனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை ஆண் குழந்தை. அதன் பெயர் வெற்றிவேலன். வெற்றி வேலன் கற்றுத் தேர்ந்து முற்றும் வளர்ந்து ஒரு கட்டழகுடைய இளைஞனாக வளரும் முன்னாலேயே ஒரு நாள் திடீரென்று அவனுடைய சிற்றப்பன் பெரும் படையுடன் வந்து நாட்டைக் கவர்ந்து கொண்டான். ஆண்டு கொண்டிருந்த அண்ணனையும் அவர் குடும்பத்தையும் காட்டுக்கு விரட்டியடித்துவிட்டு அந்தச் சிற்றப்பன் நாட்டைக் கவர்ந்து கொண்டான்.

உயிருக்குத் தப்பி ஓடிய அரசனும் அரசியும் அவர்களின் செல்ல மகனான வெற்றி வேலனும், ஏழைகளாய்ச் சிற்றூர்களில் சுற்றித் திரிந்து கொண்டிருந்தார்கள், கடைசியில், அந்த அரசர் ஒரு சிற்றூரில் நிலையாகத் தங்கி அங்கு ஓர் உழவனிடம் வேலைக்குச் சேர்ந்து கொண்டார்.

உழைத்துப் பிழைக்க வேண்டிய ஏழையாக மாறிவிட்ட போதிலும் அரசர் தன்மகன் வெற்றி வேலனை ஓர் இளவரசனை வளர்க்க வேண்டிய முறை தப்பாமல் வளர்த்து வந்தார். தமக்கு ஓய்விருந்த போதெல்லாம் அவனுக்குக் கல்வியும், கலையும், வாட்பயிற்சியும், வேற்பயிற்சியும் கற்றுக் கொடுத்தார்.

வெற்றிவேலன் வலிவும் பொலிவும் உடைய இளைஞனாக வளர்ந்துவிட்டான். ஆற்றலும் வீரமும் அஞ்சா நெஞ்சும் கொண்ட காளை போல் அவன் தோன்றினான். எந்தச் செயலிலும் வெற்றி காணக் கூடிய தனித் திறமை தன் மகனுக்கு வந்துவிட்டது என்பதை அரசர் கண்டு கொண்டார். இனி இவனை நாம் இங்கே வைத்திருக்கக் கூடாது என்று அவர் முடிவு கட்டினார்.

**வீரமகனின் உறுதிமொழி**

கடுமையாக உழைத்து அவர் சிறிது பணம் சேர்த்தார். போதுமான அளவு பணம் சேர்ந்தவுடன் ஒருநாள் காலையில் அவர் தன் மகனை அழைத்தார்.

அவர் கண்கள் கலங்கியிருந்தன. ஆனால், அவற்றிலே ஒரு நம்பிக்கை ஒளி வீசியது. ஓர் உறுதி வெளிப்பட்டது.

“வெற்றி வேலா, என் அன்பு மகனே! நீ நினைத்துக் கொண்டிருப்பது போல் நீ ஓர் உழவனின் மகனல்ல; நீ ஓர் இளவரசன்!” என்று கூறினார்.

வெற்றி வேலன் வியப்படைந்தான். “நான் இளவரசனா? அப்படியானால் என்னைப் பெற்ற அரசர் யார்? அரசி யார்?” என்று கேட்டான்.

“மகனே! உன்னைப் பெற்றவர் நாங்கள் தான்! ஆனால், நாங்கள் வஞ்சகத்தால் வாழ் விழந்தோம்!” என்று கூறிக் கோவென்று கூவி அழுதாள் அரசி,

“அம்மா அழாதீர்கள்! என் உடலில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரையில், நான் நம்முடைய நாட்டை மீட்கப் போராடுவேன். உங்களை மீண்டும் அரியாசனத்தில் வைத்துப் பார்ப்பதே இனி என் இலட்சியம்” என்று சூளுரைத்தான் வெற்றி வேலன்.

“மகனே, நான் இன்று தான் உன்னைப் பெற்றதன் பலனை அடைந்தேன். உன் இலட்சியம் வெற்றியடையுமாக!” என்று வாழ்த்தித் தாங்கள் வாழ்விழந்த கதையைக் கூறினார் அரசர்.

"மகனே,எப்போதும் உண்மையே பேசு; என்றும் உண்மைக்கே பாடுபடு; எவரிடத்திலும் அன்பாயிரு; உன்னை யண்டி வந்தவர்களுக்கு உதவி புரி” என்று அறிவுரைகள் கூறி விடைகொடுத்து வழியனுப்பினாள் அரசி.

இளவரசன் புறப்பட்டான். அரசனும் அரசியும் தங்கள் பிரிவுத் துயரத்தை யடக்கிக் கொண்டார்கள்.

**உதவி பெற்ற தேவதை**

வெற்றிவேலன் தன் வழியில் சென்று கொண்டிருந்தான். ஒரு சிற்றாறு குறுக்கிட்டது. அதில் தண்ணீர் பெருகி வழிந்து ஓடிக் கொண்டிருந்தது. அதன் கரையில் ஒரு கிழவி நின்று கொண்டிருந்தாள். அவள் ஆற்றைக் கடந்து போக ஏதாவது வழியுண்டா என்ற ஏக்கத்தோடு நின்றுகொண்டிருந்தாள். வெற்றிவேலனுக்குத் தன் தாயார் கூறிய சொற்கள் நன்றாக நெஞ்சிற் பதிந்திருந்தன.

அவன் அந்தக் கிழவியின் அருகில் சென்றான். “பாட்டி, அக்கரைக்குப் போக வேண்டுமா? நான் உதவி புரிகிறேன்” என்று கூறினான்.

கிழவி நன்றியறிதலோடு அவன் உதவியை ஏற்றுக் கொண்டாள்.

வெற்றிவேலன் கிழவியைத் தன் தோளில் தூக்கி வைத்துக் கொண்டான். பெருக்கெடுத்துப் போகும் சிற்றாற்றில் இறங்கி நடந்தான். தண்ணீரின் வேகம் அதிகமாக இருந்தது. அடி எடுத்து வைக்கும் போதெல்லாம் ஆளைச் சாய்த்துவிடும் போலிருந்தது. எப்படியோ, மூச்சைப் பிடித்துக்கொண்டு, ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்து விட்டான். தன் தோளிலிருந்து கிழவியைக் கீழே இறக்கி விட்டான். இறக்கிவிட்டவுடன் அவளை நோக்கிய வெற்றிவேலன் பெருவியப்படைந்தான். அது கிழவியல்ல; ஒரு தேவதை!

அந்தத் தேவதையை அவன் வணங்கினான்.

“மகனே, உன்னிடம் நல்ல மனம் இருக்கிறது. அந்த மனத்தில் உறுதியிருக்கிறது. உனக்கு நலம் பல உண்டாகட்டும்!” என்று வாழ்த்து மொழிகள் கூறி அந்தத் தேவதை மறைந்து விட்டாள்.

எல்லாம் கனவுபோல் இருந்தது. வெற்றிவேலன் தான் ஒரு தேவதையைக் கண்ட வியப்பிலிருது மீள நெடுநேரம் ஆகியது. பிறகு அவன் தன் வழியே நடக்கத் தொடங்கியபோது அவன் காற் செருப்பில் ஒன்று காணாமற் போயிருந்ததைக்

கண்டான். ஆற்றைக் கடக்கும்போது அது நழுவிவிட்டது என்பது அவனுக்கு அப்போது தான் தெரிந்தது. ஒற்றைக்கால் செருப்போடு அவன் மீதி வழியெல்லாம் நடந்து சென்றான். பல சிற்றூர்களையும் காடுகளையும் மலைகளையும் கடந்து அவன் கடைசியாகத் தன் சொந்த நாட்டுக்கு வந்து சேர்ந்தான்.

அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தவுடன் அரசனைப் பார்க்க வேண்டும் என்று கூறினான். காவலர்கள் அவனை அரச சபைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அவனைக் கண்டவுடனேயே அவன் சிற்றப்பனுக்குப் பீதி ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் ஒற்றைக் காலில் செருப்பணிந்து கொண்டு வரும் ஓர் இளைஞன் உன் நாட்டைப் பறித்துக் கொள்வான் என்று ஒரு முனிவர் அவனுக்குச் சாபம் கொடுத்திருந்தார். இருந்தாலும் அவனுடைய சிற்றப்பன் தன் பயத்தை வெளிப்படுத்திக் கொள்ளாமல், “தம்பி நீ யார்? எங்கு வந்தாய்?” என்று குழைவான குரலில் கேட்டான்.

“நான் தான் வெற்றிவேலன். உங்கள் அண்ணன் மகன். என் நாட்டைத் திரும்பப் பெறுவதற்காக வந்திருக்கிறேன்.” என்று கூறினான் வெற்றிவேலன்.

**சிற்றப்பன் சூழ்ச்சி**

இவனிடம் கோபமாகப் பேசக்கூடாது. நயமாகப் பேசித்தான் கொல்லவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்ட சிற்றப்பன் தன் அண்ணனை நினைத்து வருந்துவதுபோல் நடித்தான்.

“வெற்றிவேலா, அன்று நாடாளும் ஆசையில் அண்ணனைக் காட்டுக்கு விரட்டி விட்டேன். ஆனால் அதன் பிறகுதான் என் மனச்சாட்சி என்னைக் குத்திக்காட்டியது. எப்படியாவது அண்ணனைத் தேடிப்பிடித்து மீண்டும் அரசர் ஆக்கி அவர் கீழே இருந்து பணி செய்தால் போதும் என்று நினைத்தேன். ஆனால் என் ஆட்கள் அவரைத் தேடிப்போன போதெல்லாம் அவர்கள் தன்னைப் பிடித்துக் கொல்லத்தான் வருகிறார்கள் என்று பயந்து ஓடிவிட்டார். என்னால் அவரைக் கண்டு பிடிக்க முடியாமலே போய்விட்டது. நல்ல வேளையாக நீ இப்போது வந்து சேர்ந்தாய். உன் அப்பா எங்கே இருக்கிறார்? சொல். அவரை அழைத்து வந்து அடுத்த மாதமே உனக்குப் பட்டம் கட்டிவிட்டு நான் ஓய்வு எடுத்துக் கொள்கிறேன்” என்று கூறினான்.

வெற்றிவேலன் தன் சிற்றப்பனின் பேச்சை உண்மை என்று நம்பிவிட்டான். தன் தாய்தந்தையர், இருக்குமிடத்தை அந்த வஞ்சகனிடம் கூறிவிட்டான். அந்த வஞ்சகனுடைய சொற்களை நம்பி அவனிடம் அன்பு பாராட்டவும் தொடங்கினான்.

அன்று இரவு அவன் தன் சிற்றப்பனுடன் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சாப்பிடும்போதே அவர்கள் பல செய்திகள் பற்றிப் பேசிக் கொண்டார்கள். வீரர்களைப் பற்றிய பேச்சு வந்தது. பேச்சோடு பேச்சாக அந்தச் சிற்றப்பன் “அந்தக் காலம் மலையேறி விட்டது. அப்படிப்பட்ட வீரர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்” என்று சலித்துக் கொண்டான்.

“ஏன் இல்லை? எத்தனையோ வீரர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் வீரத்தை நிலைநாட்டும் வாய்ப்புத்தான் கிடைக்கவில்லை” என்றான் வெற்றிவேலன்.

இதைக் கேட்டு அவன் சிற்றப்பன் சிரித்தான். “உனக்கு ஒன்றும் தெரியாது போலிருக்கிறது. இங்கிருந்து மிகத் தொலைவில் தேன்கதலி நாடு என்று ஒரு நாடு இருக்கிறது. அந்த நாட்டிலே ஒரு தங்கக் குதிரை இருக்கிறது. அந்தத் தங்கக் குதிரையை இங்கு கொண்டு வந்து சேர்க்கக்கூடிய ஒரு வீரனை தேடித்தேடிப் பார்த்து எனக்கு அலுத்து விட்டது. அந்தக் குதிரை மட்டும் கிடைத்து விட்டால் நம் நாட்டிற்கு ஒரு பெருஞ்செல்வம்கிடைத்த மாதிரி இருக்கும்” என்று மொழிந்தான் சிற்றப்பன்.

“அந்தத் தங்கக் குதிரையை அடைவதில் என்ன தடை இருக்கிறது?’ என்று கேட்டான் வெற்றிவேலன்.

“அல்லும் பகலும் கண்மூடாமல் அங்கு ஒரு வேதாளம் காவல் இருந்து வருகிறது. அந்த வேதாளத்தைக் கொன்று வீழ்த்தக்கூடிய வீரன் இந்த மண்ணுலகில் இன்னும் பிறக்கவில்லை” என்று சொன்னான் சிற்றப்பன்.

“இதோ நான் பிறந்திருக்கிறேன். சிற்றப்பா இப்பொழுதே என்னை அனுப்பி வையுங்கள். எப்படியும் அந்தத் தங்கக் குதிரையை இங்கே கொண்டு வந்து சேர்க்கிறேன். இந்த முயற்சியில் நான் இறந்தாலும் சரியே” என்று வீராவேசமாக முழங்கினான் வெற்றிவேலன்.

உண்மையிலேயே இந்த வீரமொழிகளைக் கேட்டு அவன் சிற்றப்பன் மகிழ்ந்து போனான். தன் சூழ்ச்சி பலித்தது என்று கருதினான். வேதாளத்தின் கைப்பிடியில் சிக்கியவர்கள் உயிருடன் மீண்டதில்லை. அவர்களோடு இவனும் போய்ச் சேரட்டும் என்றுநினைத்துக் கொண்டு வெற்றிவேலனை வழி அனுப்பி வைத்தான்.

**வீரன் புறப்பட்டான்**

வெற்றிவேலன் கடற்கரைக்குச் சென்று ஒருபெரிய மரக்கலம் கட்டினான். அந்த மரக்கலத்திற்கு வேண்டிய மரங்களையும் கயிறுகளையும் வேறு பொருள்களையும் சிற்றப்பனின் ஆட்கள் தயாரித்துக் கொடுத்தார்கள். எப்படியாவது அவனை நாட்டைவிட்டு வெளியேற்றினால்போதும் என்று சிற்றப்பன் எல்லா உதவிகளும் செய்தான். அந்த மரக்கலத்தில் அவனுடன் ஐம்பது வீர இளைஞர்கள் புறப்பட்டுச் சென்றார்கள்.

பயங்கரமான கடலில் அந்த மரக்கலம் தன் பயணத்தைத் தொடங்கியது. தேன்கதலி நாடு இருக்கும் திசை நோக்கி அதன் பாய்மரங்களைக் காற்று தள்ளிக்கொண்டு சென்றது. இளம் வீரர்கள் ‘வெற்றி வெற்றி ’என்று முழங்கிக்கொண்டு அந்தக் கப்பலில் சென்று கொண்டிருந்தார்கள்.

கப்பல் புறப்பட்ட மறுநாளே வெற்றிவேலனின் சிற்றப்பன் தன் அண்ணன் இருந்த இடத்திற்குச் சில ஆட்களை அனுப்பினான். ஒரு நாள் அரசரும் அரசியும் இரவில் தூங்கிக் கொண்டிருந்தபொழுது அந்த ஆட்கள் அவர்களைக் கொலை செய்து விட்டார்கள்.

**பாட்டன் ஏறிவந்த குதிரை**

வெற்றிவேலனும் அவனுடன் சென்ற வீரர்களும், வழியில் பல இக்கட்டுகளுக்கு ஆளாகிக் கடைசியில் தேன்கதலி நாட்டை அடைந்தார்கள். அந்த ஊர்க் கடற்கரையில் அவர்கள் இறங்கியவுடனேயே நேரே அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். தேன்கதலி நாட்டை அப்பொழுது வில்லழகனின் கொள்ளுப் பேரனாகிய ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஒரு பெண்ணும் பிள்ளையும் இருந்தார்கள். பெண், பருவ வயதை யடைந்திருந்தாள்; அவள் பெண்களுக்குரிய பல கலைகளையும் அறிந்திருந்ததோடு, மாய மந்திர வித்தையும் தெரிந்து வைத்திருந்தாள். பையனோ அப்போது ஒரு சிறுவனாகவே யிருந்தான்.

வெற்றிவேலனும் மற்ற வீரர்களும் அரண்மனை போய்ச் சேர்ந்தபொழுது, அரச சபையில் சிங்காதனத்தின்மீது அமர்ந்து கொண்டிருந்தான், தேன்கதலி நாட்டின் அரசன். அவனுக்கு இருபுறத்திலும் அவன் மகள் மேகமாலையும் மகன் கார்வண்ணனும் அமர்ந்திருந்தார்கள். வெற்றிவேலனும் வீரர்களும் எதிரில் அழைத்து வரப்பெற்றதும், அவர்களை நோக்கித் தேன்கதலி நாட்டரசன், அவர்கள் எதற்காக அங்கு வந்தார்கள் என்று கேட்டான்.

“அசே, தங்கள் நாட்டில் தங்கக் குதிரை ஒன்று இருப்பதாகக் கேள்விப்பட்டோம்.அதை எங்கள் நாட்டுக்கு எடுத்துச் செல்லவே இங்கு வந்தோம்” என்று உறுதி குன்றாத குரலில் மறுமொழி கூறினான் வெற்றிவேலன்.

“வீரனே, தேவர்களே நெருங்கப் பயப்படுவார்கள் அந்தத் தங்கக் குதிரையை இன்ப வள நாட்டிலிருந்து எங்கள் பாட்டனை ஏற்றிக் கொண்டு வந்தது அந்தத் தங்கக் குதிரை. அதை அடைபவன் உண்மையிலேயே பெரும் வீரனாக இருக்க வேண்டும். நீங்கள் அதை அடைவது அரிது என்றே நான் நினைக்கிறேன்” என்றான் அரசன்.

“அரசே, தங்கக் குதிரையில்லாமல் தாயகம் செல்வதில்லை” என்ற உறுதியான முடிவுடன் வந்திருக்கிறேன். எப்படியும் அதை அடைந்தே தீருவேன்” என்றான் வெற்றிவேலன்.

“வீர இளைஞனே, உன் உறுதியை நான் போற்றுகிறேன். ஆனால், அது வீரம் ஒன்றினால் மட்டும் அடையக் கூடியதல்ல. நான் சொல்லும் மூன்று அருஞ்செயல்களைச் செய்து முடித்தால்தான் அந்தப் பெருமைக்குரிய தங்கக் குதிரை கிடைக்கும்” என்றான் அரசன்.

**மூன்று அருஞ்செயல்கள்**

தங்கக் குதிரை தன் நாட்டை விட்டுப் போய்விடாது என்ற உறுதி அரசனுக்கிருந்தது. அப்படியானால், அந்த அருஞ்செயல்கள் மிகக் கடுமையானதாகத்தான்

இருக்கவேண்டும் என்று எண்ணினார்கள் மற்ற வீரர்கள். ஆனால் வெற்றிவேலன் அயர்ந்து விடவில்லை.

“அரசே, அந்த அருஞ்செயல்கள் என்ன என்று கூறுவீர்களா?” என்று கேட்டான்.

“சொல்கிறேன் கேள்” என்று கூறத் தொடங்கினான் அரசன்.

“என்னிடம் யாருக்கும் அடங்காத இரண்டு பெரிய எருதுகள் இருக்கின்றன. அவை மூச்சு விடும்போது நெருப்பு வெளிப்படும். நெருப்பு மூச்சுவிடும் அந்த இரண்டு எருதுகளையும் அடக்கி நுகத்தடியில் மாட்டி நான்கு காணிநிலத்தையும் உழுது தர வேண்டும்.

“இரண்டாவதாக, உழுது முடித்த அந்த நிலத்தில் பறக்கும் மாயப் பாம்புகளின் பற்கள் சிலவற்றை விதையாக நடவேண்டும். நட்டவுடனே நிலத்திலிருந்து முளைத்தெழும்பும் மாய வீரர்களைப் போரிட்டு கொல்ல வேண்டும்.

“கடைசியாக, தங்கக் குதிரையின் அருகில் இருந்து இரவும் பகலும் தூங்காமல் காவல் புரியும் வேதாளத்தைக் கொன்று வீழ்த்தவேண்டும். இந்த அருஞ்செயல்களைச் செய்து முடித்தால் அந்தத் தங்கக் குதிரையை நீ அடைவதற்கு நான் தடையாக இருக்க மாட்டேன்” என்று சொல்லி முடித்தார் அரசர்.

“எப்படியும் நான் இந்த அருஞ்செயல்களை முடிப்பேன்” என்று உறுதி மொழிந்து விட்டு வெளியேறினான் வெற்றிவேலன்.

அரச சபையில்தான் அவன் உறுதி கூறினானே தவிர, அவன் உள்ளத்திற்குள் ஒரு தளர்ச்சி ஏற்படத்தான் செய்திருந்தது. இல்லாத தெய்வங்களை யெல்லாம் வேண்டிக் கொண்டு தன் கப்பலுக்குத் திரும்பினான். அங்கே அவனுக்கு ஓர் உதவி காத்துக் கொண்டிருந்தது.

இளவரசி மேகமாலைதான் அங்கே காத்துக் கொண்டிருந்தாள். அவள் சில மாய மருந்துகள் கொடுத்தாள். அவை கையில் இருந்தால் கத்தியும் நெருப்பும் அவனை ஒன்றும் செய்ய முடியாதென்று கூறினாள். அந்தக் கொடிய எருதுகளை எப்படி அடக்க

வேண்டும் என்றும், பாம்பு விதையிலிருந்து கிளம்பும் வீரர்களை எப்படி யழிக்கவேண்டும் என்றும் சொல்லிக் கொடுத்துவிட்டு அவள் போய்விட்டாள். அவள் சென்றபிறகு வெற்றிவேலன் தன் மரக்கலத்திற்குச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டான்.

மறுநாள் கலையில் குறிப்பிட்ட நான்கு காணி நிலத்தையும் சுற்றி மக்கள் கூட்டம் கூட்டமாக நின்றார்கள். சாவைச் சந்திக்க வந்திருக்கும் வெளிநாட்டு வீரனைச் சந்திக்கக் காத்திருந்தார்கள். ஓர் உயர்ந்த மேடையின் மீது அரசனும் மகள் மேகமாலையும் மகன் கார்வண்ணனும் அமைச்சர்களும் அமர்ந்திருந்தா்ாகள்.

நிலத்தின் மத்தியில் அந்தப் பயங்கர எருதுகள் பலமான கயிறுகளால் கட்டப்பட்டு நின்று கொண்டிருந்தன அவற்றின் மூக்கிலிருந்து நெருப்பு குப்குப்பென்று வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த எருதுகளிடம் அகப்பட்டு மடிய எங்கிருந்தோ வந்திருக்கிறானே இந்த வெற்றிவேலன் என்று மக்கள் அவனுக்காக இரக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மேகமாலை ஒருத்தியைத் தவிர எல்லோரும் அவன் இறுதிக் காலம் வந்துவிட்டதென்றே எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

**நெருப்பு மூச்சுவிடும் எருதுகள்**

தன் தோழர்களான ஐம்பது வீரர்களும் புடைசூழ வெற்றிவேலன் அந்த நிலத்திற்குள் நுழைந்தான். வீரர்களை ஒரு புறத்தில் நிற்க வைத்துவிட்டு அவன் அந்த எருதுகளை நெருங்கினான். வெற்றிவேலன் எருதுகளின் அருகில் வந்தவுடன், அரசனுடைய ஆட்கள் அவற்றைக் கட்டியிருந்த கயிற்றை வாளால் வெட்டித் துண்டித்து விட்டார்கள். உடனே அவை பெரு மூச்சுவிட்டுக் கொண்டு அனல் கக்கியவண்ணம் வெற்றிவேலனை நோக்கிப் பாய்ந்தன.

அவற்றின் கொம்புகள் இருப்பாணிபோல் கூர்மையாக இருந்தன. வெயில் ஒளிபட்டுப் பளபளவென்று மின்னின. அவை பாய்ந்தோடி வந்த போது நிலம் அதிர்ந்தது. அவற்றின் மூக்குத் துவாரங்களிலிருந்து முன்னிலும் அதிகமாக நெருப்புச்சுழல்கள் வெளிப்பட்டன. அந்த நிலமே நெருப்புப் பற்றி எரிவதுபோல் காட்சியளித்தது. ஆனால், அவை வெற்றி வேலனை ஒன்றும் செய்யவில்லை. மேகமாலையின் மாய மருந்து அவன்கையில் இருந்ததால் நெருப்பின் அனல் அவனை ஒன்றும் செய்யவில்லை. வெற்றிவேலன் நிலத்தின் நடுவில் நின்றான். எதிர்ப் புறத்திலிருந்து அவனைத் தாக்க ஓடி வந்தன எருதுகள். இரண்டும் நெருங்கி வரும் நேரம் வெற்றிவேலன் சட்டென்று தான் நின்ற இடத்தை விட்டு விலகிக் கொண்டான். இரண்டு எருதுகளும்

ஒன்றையொன்று முட்டிக்கொண்டன. உடனே அந்த எருதுகளுக்கு ஒன்றுக்கு ஒன்று கோபம் ஏற்பட்டு இரண்டும் முட்டி மோதிக் கொண்டு சண்டையிட்டன. தங்கள் பொது எதிரியை அவை மறந்துவிட்டன. வெற்றிவேலன் அவற்றைக் கவனித்துக் கொண்டு நின்றான். அவை சண்டையிட்டுத் களைத்த நேரம் பார்த்து அவற்றின் அருகில் பாய்ந்து சென்று இரண்டையும் கொம்பைப் பிடித்து இழுத்தான். தயாராக இருந்த ஏரின் நுகத்தடியின் கீழ் அவற்றை நுழைத்துப் பூட்டினான். அவை பசுப் போல் அடங்கிவிட்டன. அவன் முதுகில் தட்டிக் கொடுக்கக் கொடுக்க முன் நடந்து சென்றன. தட்டிக்கொடுத்துத் தட்டிக்கொடுத்து அவன் அந்த நான்கு காணி நிலத்தையும் உழுது விட்டான். தங்களை அவன் அடித்துத் துன்புறுத்தாததால் அவை அவனுக்கு நன்றியுடன் வேலைபார்த்தன. மக்கள் எல்லோரும் இந்தச் சாதனையை வைத்த கண் வாங்காமல் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெற்றிவேலன் உழுது முடித்து எருதுகளை மீண்டும் கட்டிப்போட்டபோது மாலைக் கதிரவன் மேலை மலைகளில் சாய்ந்து விட்டான்.

மறுநாள் காலையில் நிலத்தில் விதையிடலாம் என்று அரசர் கூறினார். மக்கள் கலைந்து சென்றார்கள். வெற்றிவேலன் தன் வீரத் தோழர்களுடன் மரக்கலத்திற்குத் திரும்பினான். அரசர் தன் ஆட்களோடும் மக்களோடும் அரண்மனை சென்றார்.

**மாய வீரர்கள்**

அடுத்த நாள் பொழுது விடிந்தது. ஊர் மக்கள் திரண்டு வந்து அந்த நான்கு காணி நிலத்தையும் சுற்றிக் கூடி நின்றார்கள். முதல் நாள் நினைத்ததுபோல் மக்கள் அன்று நினைக்கவில்லை. முதல்நாள் வெற்றிவேலன் சாகப் போகிறான் என்று நினைத்தார்கள். அன்றோ அவன் எப்படி வெல்லப் போகிறான் என்று காணவேண்டும் என்ற ஆவலோடு நின்றார்கள். அவன் வெற்றி பெறவேண்டும் என்று அவர்களின் நெஞ்சங்கள் துடித்துக் கொண்டிருந்தன.

அரசர் தன் மகளுடனும் மகனுடனும் வந்து மேடையில் அமர்ந்து விட்டார். சிறிது நேரத்தில் வெற்றிவேலனும் தன்னைச் சுற்றி ஐம்பது வீரர்கள் புடைசூழ்ந்துவர வந்து சேர்ந்தான். அவன் களத்திற்குள் நுழைந்தவுடனேயே அரண்மனை ஆட்கள் ஒரு கூடையைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். அந்தக்கூடை நிறையப் பறக்கும் மாயப் பாம்புகளின் பற்கள் நிறைந்திருந்தன.

கூடையைக் கையில் வாங்கிய வெற்றிவேலன் அந்த மாயப் பற்ளை அந்த நான்கு காணி நிலத்திலும் ஒவ்வொன்றாக நட்டு விதைத்தான். எல்லாப் பற்களையும் அவன் நட்டு முடித்தவுடன் திடீரென்று அந்த நிலத்திலிருந்து நூற்றுக்கணக்கான வீரர்கள்

தோன்றினார்கள். மண்ணுக்குள்ளிருந்து தோன்றிய அந்த மாய வீரர்கள் அனைவரும் வெற்றி வேலனை நோக்கி ஓடிவந்தார்கள்.

வெற்றிவேலன் பெரிய பெரிய கற்களை எடுத்து அவர்கள் மீது வீசினான். அவன் ஓரிடத்தில் நில்லாமல் சுற்றிச் சுற்றி வந்து அவர்கள் மீது கற்களை வீசினான்.

அந்த மாய வீரர்களுக்கிடையே குழப்பம் ஏற்பட்டது. எதிரில் வருபவர்கள்தான் தங்கள் மீது கல்லை எறிகிறார்கள் என்று ஒவ்வொரு வரும் நினைத்துக் கொண்டார்கள். எனவே எதிரெதிராக வந்த வீரர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டார்கள். தங்களுக்குள்ளேயே ஒருவரையொருவர் வெட்டிக்கொன்று கொண்டு செத்தொழிந்தார்கள்.

வெற்றிவேலனின் அறிவுத் திறமையினால் ஏற்பட்ட வெற்றியைக் கண்டு மக்கள் ஆரவாரித்தார்கள்.

**வேதாளத்துடன் சண்டை**

தேன்கதலி நாட்டின் அரசர் வெற்றிவேலனின் திறமையை மனத்திற்குள் பாராட்டினார். ஆனால், தன் நாட்டில் ஒரு பெருஞ் செல்வமாய் இருக்கும் தங்கக் குதிரையை இந்த வெற்றிவேலன் கொண்டு போய்விடுவானோ என்ற அச்சம் அவர் மனத்தில் குடிபுகுந்து விட்டது. முந்தியநாள் வரையில் அவர் அதைப் பற்றிக் கவலைப்படாமலே இருந்தார். இப்போது அந்தக் கவலை ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும் தன் பீதியை வெளிப்படுத்திக் கொள்ளாமல், வெற்றி வேலனைப் பாராட்டிப் பேசினார்.

“இளவரசனே! உன்வீரத்தையும்அறிவுத் திறமையையும் அஞ்சா நெஞ்சத்தையும் பாராட்டுகிறேன். நீ தங்கக் குதிரையை அடைவதற்கு இன்னும் ஒரு செயல் செய்யவேண்டியதிருக்கினது. அதை நாளைக் காலையில் செய்து முடித்தாயானால், தங்கக் குதிரையை மட்டுமல்ல என் மகளையும் உனக்கே கட்டித் தருகிறேன்!” என்று கூறினார். அவர் இப்படி யெல்லாம் கூற வேண்டும் என்று நினைக்கவேயில்லை. ஆனால், வெற்றிவேலனின் கள்ளமற்ற இனிய முகத்தைப் பார்த்தவுடன் அவருக்கு மனத்தில் ஓர் அன்பு சுரந்துவிட்டது. இரண்டு போட்டிகளில் அவன் வெற்றி பெற்றுவிட்டான் என்று கண்டபோதே அவனை ஒரு மாவீரனாக அவர் மனம் மதிக்கத் தொடங்கிவிட்டது. அதனால்தான் இப்படிப்பட்ட சொற்கள் அவர் வாயிலிருந்து புறப்பட்டன.

வெற்றிவேலன் மகிழ்ச்சியுடன் தன் தோழர்களை அழைத்துக்கொண்டு மரக்கலத்திற்குத் திரும்பினான்.

மறுநாள் காலையில் மக்கள் கூட்டம் நான்கு காணி நிலத்தைச் சுற்றிக்கூடவில்லை. அந்த நான்கு காணி நிலம் சுடுகாடுபோல் காட்சியளித்தது. மாயப் பாம்புப் பற்களிலிருந்து முளைத்த வீரர்களின் எலும்புகளும் தோலும் நினமும் இரத்தமுமாகக் காட்சியளித்த அந்த நிலத்தில் கழுகுகளும் பருந்துகளும் காக்கைகளும் தான் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

தங்கக் குதிரை இருந்த மரத்தைச் சுற்றித் தான் மக்கள் கூடி நின்றார்கள். அங்குக்காவல் நின்ற வேதாளம், என்றுமில்லாதபடி அன்று மக்கள் தன்னைச் சுற்றிக் கூடியிருப்பதைக் கண்டு பெருங்கோபம் கொண்டது. யாரும் மரத்தடியை நெருங்காதபடி அது அவர்களைப் பயமுறுத்தி விரட்டிக்கொண்டு நின்றது. எல்லோரும் தூரத்திலேயே நின்று கொண்டிருந்தார்கள்.

அரசரும் அவர் மகள் மேகமாலையும் மகன் கார்வண்ணனும் அந்த மரத்தடிக்குவந்து அங்கிருந்த மேடை ஒன்றின்மீது அமர்ந்தார்கள். வேதாளம் அவர்கள் எதிரில் வந்து நின்று வணங்கியது.

“ஏ, வேதாளமே! உன்னுடன் சண்டை செய்ய ஓர் இளம் வீரன் வருகிறான். எச்சரிக்கை!” என்று கூறினார் அரசர்.

வேதாளம் இதைக் கேட்டவுடன் ஆங்காரத்துடன் எழுந்து தங்கக் குதிரையின் அருகிலே போய் நின்றுகொண்டது.

சிறிதுநேரத்தில் வெற்றிவேலன் அங்கு வந்து சேர்ந்தான். கூடவந்த ஐம்பது வீரர்களையும் துரத்திலேயே நிற்க வைத்துவிட்டு அவன் தன்னந்தனியாக வேதாளத்தை நோக்கிச் சென்றான். வேதாளம் ஆவேசமாக அவனை நோக்கிப் பாய்ந்தோடி வந்தது. உடனே வெற்றிவேலன் தன் கையில் இருந்த ஒரு மாயப் பொடியை அதன் முகத்தில் தூவினான். அந்த வேதாளம் அந்த இடத்திலேயே மயக்கம் போட்டு விழுந்தது. உடனே அவன் தன் வாளினால் அதன் தலையை வெட்டி உடலைக் கூறுகூறாகத் துண்டித்துப் போட்டான். கூடி நின்ற மக்கள் குதுகலத்துடன் ஆரவாரித்தார்கள். அரசரும் அவனுடைய திறமையைப் பாராட்டினார்.

**மேகமாலை திருமணம்**

அன்றே அவர் அவனுக்குத் தங்கக் குதிரையைக் கொடுத்தார். அதற்கு மறுநாளே தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்தார்.

திருமணம் முடிந்தவுடன் அவன் சில நாட்கள் விருந்துண்பதற்காகத் தங்கினான். பிறகு தன் நாட்டுக்குப் புறப்பட்டான்.

தங்கக் குதிரையைப் பிரிவதுகூட அரசருக்குப் பெரிதாகப்படவில்லை. தன் மகளைப் பிரிவதுதான் பெரும் துயரமாக இருந்தது.

“அப்பா, நீங்கள் கவலைப்பட வேண்டாம் நாங்கள் அடிக்கடி உங்களை வந்து பார்த்துக் கொள்ளுகிறோம்” என்று மேகமாலை கூறினாள்.

கடைசியில் அவர்கள் ஒருநாள் புறப்பட்டு விட்டார்கள். வெற்றிவேலன் தன் மரக்கலத்தைப் புறப்படுவதற்குத் தயாரித்தான். அதைப் பார்த்த மேகமாலை, “மரக்கலத்தில் உங்கள் வீரர்கள் வரட்டும். நாம் தங்கக் குதிரையிலேயே செல்வோம்” என்றாள்.

“எப்படி?” என்று கேட்டான் வெற்றிவேலன்.

“இப்படித்தான்!” என்று சொல்லி அவள் சில மந்திரங்களைத் தங்கக் குதிரையின் காதில் கூறினாள். உடனே அது தன் இறக்கைகளை அசைத்தது. அதற்கு மூச்சு வந்து விட்டது. அரசரிடம் விடைபெற்றுக் கொண்டு வெற்றிவேலனும் மேகமாலையும் தங்கக் குதிரையில் ஏறி உட்கார்ந்தார்கள். அது தாவிப் பாய்ந்து வானில் ஏறி மேகமண்டலங்களின் வழியாகச் சென்றது. வெற்றிவேலன் நாட்டை நோக்கிப் பறந்தது.

வெற்றிவேலனின் சிற்றப்பன் அன்று அரண்மனை உப்பரிகையின்மேல் காற்று வாங்கிக் கொண்டு நின்றுகொண்டிருந்தான். அப்போது வானில் ஒரு மின்னல் ஒளி தோன்றியது. நிமிர்ந்து பார்த்தான். தாவிப் பாய்ந்து தங்கக் குதிரை பறந்து வருவதைக் கண்டான். அதன்மீது ஓர் இளவரசியுடன் தன் அண்ணன் மகன் ஏறிவருவதைக் கண்டான்.

எதிர்பாராமல் அவன் திடீரென்று கண்ட காட்சி அவன் மூளையைச் சிதறடித்து விட்டது. “ஐயோ! இனி நான் பிழைக்கமாட்டேன்!” என்று கூறியபடி கீழே தடாலென்று வீழ்ந்தான். அவ்வளவுதான்! அவன் மூச்சு நின்றுவிட்டது.

வெற்றிவேலன் அந்த நாட்டை மேக மாலையின் உதவியுடன் சீரும் சிறப்புமாக ஆண்டு வந்தான். தாவிப்பாயும் தங்கக் குதிரையில் ஏறி மேகமாலை அடிக்கடி தேன்கதலி நாட்டுக்குச் சென்று தன் தந்தையையும் தம்பியையும் பார்த்து வந்தாள். எல்லோரும் இன்பமாக இருந்தனர்.

எங்கும் இன்பம் தங்கவே
இனிய கதையும் முடிந்ததே!

----------------

## 2. கள்வர் குகை (சிறுகதை)

### ஆசிரியர்: பாவலர் நாரா. நாச்சியப்பன்

**Source:**

கள்வர் குகை
எழுதியது : நாரா. நாச்சியப்பன்
ஆசிரியர் “இளந் தமிழன்", சென்னை- 14
விலை 15 காசுகள்
வெளியிடுவோர் : கலைப்பிரசுரம், தேவகோட்டை. 623302
கலைப் பிரசுரம் வெளியீடு – 5
செந்தமிழ்ப் பதிப்பகம்

----------------------

### பதிப்புரை

தம்பிகளே ! தங்கையரே !.

"கள்வர் குகை" கலைப் பிரசுரத்தின் ஐந்தாவது வெளியீடு. 23 ஆண்டுகட்கு முன் அன்புள்ளம் கொண்ட அண்ணன் "நாரா. நாச்சியப்பன்" அவர்கள் எழுதியது.

மீண்டும் வெளியிடுவதில் மிக்க மகிழ்சியடைகிறேன்.

நீங்கள் எல்லாம் உங்கள் எண்ணத்தை எங்கட்கு எழுதுவீர்கள் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

VR. ARUNACHALAM, MADRAS-4

-------------

### கள்வர் குகை

அந்தக் காலத்தில் வேடர்கள் தனித் தனியான கூட்டங் கூட்டமாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒவ்வொரு தலைவன் உண்டு. அவனே அவர்கள் வேட அரசன் என்று கூப்பிடுவார்கள். அவன் ஆணைப்படி மற்ற வேடர்கள் நடப்பார்கள். வேட்டைக்குப் புறப்பட்டுப் போகும் போது அவன் முன்னே நடக்க அவன் பின் மற்றவர்கள் நடந்து செல்வார்கள். அவன் எங்கு சென்றாலும், அவனை

இரண்டு வேடர்கள்: தொடர்ந்து செல்வார்கள். வேடர்களுக்கு அவன் தலைவனா-யிருந்தாலும், நகரத்தில் உள்ள அரசர்களுக்குக் கட்டுப்பட்டவன் தான். காட்டில் விளையும் பொருள்களில் ஒரு பகுதியை அவன் நகரத்தையாளும் அரசனுக்குக் கப்பமாகக் கட்டவேண்டும். இன்னும் வில் வளைக்க, அரசன் படையில் உள்ளவர்களுக்கு அவன் தன் ஆட்களே அனுப்பிச் சொல்லித்தர வேண்டும். இது போல் காட்டரசர்களுக்கும் நாட்டரசர்களுக்கும் ஒரு வகையான ஒப்பந்தம் இருந்து வந்தது.

கொல்லிமலைக் காட்டில் இது போல் ஒருவேடர் கூட்டம் இருந்து வந்தது. அக்கூட்டத் தலைவனுக்கு ஒரு மகன் இருந்தான். அவனுக்கு நம்பி என்று பெயர். நம்பி எப்பொழுதும் காடுகளைச் சுற்றிக் கொண்டு திரிவான். அவன், கையில் வில்லும் அம்பும் எப்பொழுதும் தயாராக நாணேற்றியபடி இருக்கும். குடிசைக்கு வராமலே அவன் பல நாட்கள் காடுகளைச் சுற்றுவான். அப்பொழுது கணக்கில்லாத மிருகங்களைக் கொன்று குவிப்பான். மலைகளின் மீது ஏறி இறங்குவது அவனுக்கொரு விளையாட்டு. நம்பி, வேடர் தலைவனுக்கு ஒரே மகனாகையால், அவன் விருப்பப்படி தனியாகச் சுற்ற விட்டிருந்தான். அவனை என்ன குற்றம் செய்தாலும் கண்டிக்கவே மாட்டான். அவ்வளவு உரிமையளித்திருந்தான். மற்ற வேடர்களும் அவ்ன் தங்கள் தலைவர் மகன் என்று அவன் செய்யும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுவார்கள்.

சில சமயங்களில் அவன் புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு மரத்திலிருந்தபடி வேடர்களுக்கு மத்தியில் குதிப்பான். அவர்கள் எங்கிருந்தோ புலி பாய்கிறது என்று எண்ணிப்பயந்து பதைபதைத்துச் சிதறி ஓடுவார்கள். உடனே புலித்தோலை நீக்கிவிட்டு வெளியில் வந்து சிரிப்பான். இப்படிப் பல வேடிக்கைகள் செய்துகொண்டே அவன் தன் வாழ்க்கையை இன்பமாகச் செலுத்தி வந்தான்.

ஒரு நாள் நம்பி, ஒரு மரத்தின் மேல் ஏறிப்பழம் பறித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது கீழே ஒரு குதிரை நிற்பதைப் பார்த்தான். குதிரையில் வந்த ஆள் அதை மரத்தடியில் கட்டிவிட்டு எதற்காகவோ இறங்கி நடந்து கொண்டிருந்தான். நம்பி மரத்தை விட்டுக் கீழே இறங்கினான். குதிரையை அவிழ்த்து அதன் முதுகில் ஏறிக்கொண்டு கிளம்பினான். அது பாண்டிய மன்னனின் குதிரை. அவனுடைய படை வீரர்கள், சிறிது தூரத்தில் தங்கியிருந்தார்கள். எல்லோரும் காட்டில் வேட்டையாடு-வதற்காக வந்திருந்தார்கள். பாண்டியனுடைய குதிரை பஞ்சாய்ப் புறப்பதைக் கண்ட வீரர்கள், அரசன் தான் ஏதோ கொடிய மிருகத்தை விரட்டிச் செல்கிறான் என்று எண்ணி அந்தக் குதிரையைத் தொடர்ந்து தங்கள் குதிரைகளையும் தட்டி விட்டார்கள். தம்பியும் குதிரையும் சென்ற வழியில் பாண்டியன் படைவீரர். அனைவரும் பறந்து விட்டார்கள்.

குளத்தில் நீர் அருந்துவதற்காகச் சென்ற பாண்டியன் குதிரைகள் கிளம்பும் சத்தத்தைக் கேட்டுத் திரும்பி வந்தான். அங்கே தன் குதிரையையும், படை வீரர்களையும் காணவில்லை. எதற்காகத் தன்னை விட்டு அனைவரும் கிளம்பி விட்டார்கள் என்பதும், தன் குதிரையை யார் எதற்காகக் கொண்டு சென்றார்கள் என்பதும், அவனுக்குப் புரியவில்லை. கால்நடையாக ஊருக்குள் போவதற்கு அவனுடைய உயர் தன்மை இடங்கொடுக்கவில்லை. என்ன செய்வதென்று புரியாமல், வேடர் தலைவன் தங்கியிருந்த குடிசை நோக்கி தடந்தான்.

இதற்கிடையில், நம்பியை அரசனென்று நினைத்துப் பின் தொடர்ந்த வீரர்கள், அந்தக் குதிரையின் வேகத்தைப்பிடிக்க முடியாமல் பின் தங்கி விட்டார்கள். விரட்டிய ஆட்கள் நின்று விட்ட பிறகு நம்பி, வேறு வழியாகக் குதிரையைத் திருப்பித் தன் குடிசை நோக்கித் தட்டினான். வீரர்கள் எவ்வளவோ நேரம், ஓரிடத்தில் காத்திருந்தும், அரசன் திரும்பி வராததால் அடுத்த நாட் காலை நகர் நோக்கிக் கிளம்பி விட்டார்கள். .

நம்பி குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டுத் தன் குடிசைக்கு வந்தான். அங்கே, பாண்டியனும், வேடர். தலைவனும் உட்கார்ந்திருந்தார்கள். அங்கே வந்த நம்பி! "அப்பா! இன்று காலையில் மாமரத்தடியில் ஒரு குதிரை நின்றது. அதைப் பிடித்துக்கொண்டு, சவாரிக்குக் கிளம்பினேன். அந்தக் குதிரைக்காரன், அவனுடைய ஆட்களை விட்டு விரட்டினான். நான் அகப்படவே. இல்லையப்பா." என்று தன் திறமையைக் கூறினான். "ஏண்டா, அரசருடைய குதிரையை, ஆணையில்லாமல் சவாரிக்குக் கொண்டு போகலாமா?" என்று அதட்டினான் வேடத் தலைவன். அவன் உடனே பாண்டியனைப் பார்த்து, "ஏனையா, நீரே சொல்லும், சவாரி செய்து பார்த்தால் என்ன குறைந்து விடும். இதற்கெல்லாம், உத்தரவு கேட்டால் நடக்குமா?" என்று தட்டிக் கேட்டான். பாண்டியனுக்கு ஒருபுறம் கோபமும், ஒருபுறம் வருத்தமுமாக இருந்தது.

அவன் வேடர் தலைவனை முறைத்துப் பார்த்தான். உடனே வேடர் தலைவன், "டே நம்பி, எட்ட நின்று பேசு! அரசரிடம் இப்படித்தான் பேசுவதா?" என்று அதட்டினான். உடனே நம்பி, "ஓகோ இவர்தான் பாண்டியரா? ஏனையா நீர் ஐநூறு குதிரை வைத்திருக்கிறீரே, இந்தக் குதிரையை எனக்குத் தந்துவிடும். இது மிக அருமையான

குதிரை. என் சவாரிக்கு ஏற்ற குதிரை! நானே வைத்துக் கொள்கிறேன். சரிதானே?" என்று கேட்டான். அரசன் என்று தெரிந்த பிறகும் சிறிது கூட அஞ்சாமற் பேசும், தம்பியின் மீது பாண்டியனுக்கு ஒரு வகையான அன்பு பிறந்தது. சரி நாளைக்கு வேறு குதிரை யனுப்புகிறேன். இப்பொழுது இந்தக் குதிரையைக் கொடு, நான் ஊர் போக வேண்டும்" என்று கெஞ்சினான். இந்தக் குதிரைதான் பாண்டியரே நல்ல குதிரை, இதை. நாளையனுப்புவதானால் இன்று தருகிறேன். இல்லாவிட்டால் கிடையாது" என்று சொல்லி விட்டான் நம்பி! "சரி" யென்று சொல்வதைத் தவிரப் பாண்டியனால் அப்பொழுது வேறொன்றும் செய்ய முடியவில்லை. கடைசியில் குதிரையை வாங்கிக்கொண்டு அரண்மனை போய்ச் சேர்ந்தான். அடுத்த நாள் பாண்டியன் அரண்மனையிலிருந்து ஒரு வீரன் வந்து குதிரையைக் கொடுத்து விட்டுப் போனான். அது முதல் அந்தக் குதிரையுடன் காடு மேடு சுற்றுவதே தொழிலாகக் கொண்டான் நம்பி!

ஒரு நாள் கொல்லிமலையைச் சுற்றிக்கொண்டு வந்தான் தம்பி! ஓரிடத்தில் மலைச்சாரலில் ஏதோ மனிதர்கள் பேசும் அரவங்கேட்டது. சட்டென்று தன் குதிரையை நிறுத்தி ஒரு புதருக்குப் பின்னால் கட்டிவிட்டு மரத்தின் மேல் ஏறி நின்று பார்த்தான். மலைச் சாரலில் ஓரிடத்தில் மூன்று ஆசாமிகள் கூடி நிற்பதும், ஒருவன், மலைக்குக் கீழ் அடிக்கடி போய் வருவதும் போலத் தோன்றியது. மலைக்குக் கீழ் எப்படி போய்வர முடியும் என்று அவனுக்குப் புரியவில்லை. அன்று முதல் தினமும் அதே நேரத்திற்கு அங்கே வருவான். மரத்தின் மேல். ஏறுவான்: அந்த மூன்று பேரும் பேசிக் கொள்வதைப் பார்ப்பான். பிறகு போய்விடுவான், இப்படியாகப் பல நாட்கள் சென்றன.

ஒரு நாள் அவர்கள் மூவரும் பேசிக்கொண்டிருந்து விட்டுச் சென்ற பிறகு, அங்கே ஏன் கூடிப் பேசுகிறார்கள், அந்த இடத்தில் அப்படி என்ன இருக்கிறது, என்று தெரிந்து கொள்வதற்காக, மெதுவாக அந்த இடத்தை நோக்கி நடந்தான். அந்த இடத்தைச்சுற்றி ஒரே புற்றும் புதரும் செடியும் கொடியும், மரமுமாக வளர்ந்திருந்தது. வெளியில் நின்று கொண்டு பார்த்தால் சாதாரணமாக அந்த இடம் யார் கண்ணுக்கும் தெரியாது. அந்த இடத்தைச் சுற்றிச்சுற்றி நன்றாகக் கவனித்தான் நம்பி; மலையியின். நடுவில் ஒரு பாறை துண்டாக இருப்பதுபோல் தெரிந்தது. அதற்குச் சற்றுத் தூரத்தில் ஏதோ ஒன்று மின்னிக்கொண்டு கிடந்தது. போய் அதையெடுத்துப் பார்த்தான், வைரக் கற்கள் பதித்த தங்கச் சங்கிலி அது. நல்ல வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. சரி, மீதியை நாளைக்குப் பார்த்துக்கொள்ளுவோம் என்று அதை எடுத்துக்கொண்டு திரும்பி

வந்துவிட்டான். அவனுக்கு அந்த மூன்று ஆட்களைப் பற்றியும் விவரமாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று ஒரு ஆசையுண்டாகியது.

அதன் பிறகு மறுநாள் மறுபடி வந்து பார்த்தான், அன்று அவர்கள் வருவதற்கு முன்பே அந்த இடத்தில் ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்துகொண்டு நின்றான். அந்த மூன்று ஆசாமிகளும் வந்தார்கள், அவர்களில் ஒருவன் தான் தமிழன். மற்றவர்கள் இரண்டுபேரும் தலையைத் திட்டுத் திட்டாக வழித்து, முடியிருக்கும் இடத்தில் இரண்டு சடைகள் பின்னித் தொங்கவிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மங்கோலியர்கள், அவர்கள் மூவரும் வந்து மங்கோலிய மொழியில் ஏதேதோ பேசிக் கொண்டார்கள். அதெல்லாம் நம்பிக்குப் புரியவில்லை.. ஆகையால் அவர்கள். செயல் ஒவ்வொன்றையும் ஊன்றிக் கவனித்தான். நெடுநேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்து விட்டு, அந்த மங்கோலியர்களில் ஒருவன், தனியாக நின்ற பாறாங்கல்லின் அடியில் எதையோ அழுத்தினான். மற்றொரு ஆள் அதை மெதுவாகச் சாய்த்தான். பிறகு மூவரும் உள்ளே சென்றார்கள். உள்ளே என்ன செய்தார்களோ தெரியவில்லை. சிறிது நேரம் சென்றபிறகு மூவரும் வெளியில் வந்தார்கள். மங்கோலியர் இருவர் கையிலும் தங்கப் பாளங்கள் மின்னின. அவற்றை மடியில் கட்டிக்கொண்டனர். பிறகு எல்லோரும் நடந்தனர். தூரத்தில் ஒரு கால்வாய் இருந்தது. அதில் அப்பொழுது தண்ணீர் கிடையாது. அதில் இறங்கி அந்தக் கால்வாய் ஓடிய திசையில் நடந்து சென்றார்கள், நம்பி, திரும்பிப்போய்க் குதிரை மீது ஏறிக்கொண்டான். அந்தக் கால்வாய்க்குச் சிறிது தூரத்தில் அதையொட்டியவாறே குதிரையை நடத்திக்கொண்டு பறந்தான்.

அந்தக் கால்வாய் ஒரு ஆற்றங்கரையில் போய் முடிந்தது அந்த இடத்தில் ஒரு மரத்தடியில் மறைவாகக் குதிரையைக் கட்டிவிட்டு ஒரு மரத்தின்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டான். கால்வாய் வழியாக நடந்து வந்த ஆட்கள் ஆற்றங்கரை வந்ததும் வணக்கம் கூறிக் கொண்டார்கள் பிறகு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆள் கரை வழியாகவே மேற்கு நோக்கி நடந்தான். மற்ற இருவரும் அங்கு கட்டிவைத்திருந்த படகை அவிழ்த்துக் கொண்டு புறப்பட்டனர். படகு ஆற்றில் மேற்கு நோக்கி அதன் போக்கில் சென்றது. சிறிது தூரம் சென்றவுடன் அதில் இருந்த ஒரு மங்கோலியன் நம்பி-யிருந்த மரத்தைச், சுட்டிக் காட்டி என்னவோ சொன்னான். அவனும் திரும்பிப் பார்த்து விட்டு ஏதோ பேசிக்கொண்டான். நம்பி அவர்கள் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்த மங்கோலியர் இருவரும் தான் அவர்களைக் கவனித்ததைக் கண்டுகொண்டு விட்டார்கள் என்பதை நம்பி உணரவில்லை. பிறகு இறங்கிக் குதிரையைத் தமிழ் ஆசாமிபோன திசையில் தட்டிவிட்டான். வெகுதூரம் போயும் அவனால் ஒன்றும் கண்டு பிடிக்க முடியவில்லை. பிறகு மனம் சலித்தவனாக வீடு

திரும்பினான். அடுத்த நாள் காலையில் எழுந்த உடன் குதிரைமீது ஏறிக்கொண்டு, வழக்கம்போல் அந்த மூன்று பேர் சந்திக்கும் இடத்திற்கு வந்தான். மரத்தின் மேல் ஏறிக் கீழ் நோக்கினான். அந்தத் தமிழ் ஆசாமிமட்டும் அங்கே நின்று கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் அவன் மலைக்குக் ழே மறைவதுபோல் தோன்றியது.

நம்பி மரத்தைவிட்டுக் கீழே இறங்கினான். மறைந்து மறைந்து அந்த இடத்திற்குப் போய் மரத்தின் பின் ஒளிந்து கொண்டு, நடப்பதைக் கவனித்தான். தமிழ் ஆசாமி ஒரு ஆளே, கீழே உள்ள ஒரு கல்லைக் காலால் அழுத்தி மேலே உள்ள பாறாங்கல்லை நிமிர்த்தி அந்த இடை வெளியை மூடினான். பிறகு அவன் அந்தக் கால்வாயை நோக்கி நடந்தான்.

அவன். சென்ற பிறகு தம்பி மெதுவாக வெளியில் வந்தான். சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்துக் கொண்டான். அந்த அடியில் இருந்த கல்லை அழுத்திக்கொண்டு, மேலேயிருந்த பாறாங்கல்லைப் புரட்டினான். உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. கொஞ்ச தூரம் தட்டித் தடவியபடி நடந்து சென்றான். பிறகு எங்கிருந்தோ வெளிச்சம் வந்தது. அந்தக் குகை முழுவதும் தகதகவென்று ஒளிவீசியது. அங்கு குவித்திருந்ததெல்லாம், தங்கம், வெள்ளி, வைரம் முதலிய விலையுயர்ந்த பொருள்கள். அவற்றில் சிறிது சிறிது அள்ளித் தன் வேட்டியில் மடிகட்டிக்கொண்டான். விறுவிறுவென்று வெளியில் வந்தான். நேராகக் குதிரையேறித் தன் குடிசைக்குப் புறப்பட்டான்.

அப்படிப் புறப்பட்டுப் போனவன் அந்தப் பாறையை மூடி வைக்காமல் போய்விட்டான். அதன் பிறகு அன்று மாலையில் சந்தித்த மூன்று ஆசாமிகளும் யாரோ, தங்களைக் கண்டு பிடித்துவிட்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்டார்கள். அதற்குத் தகுந்தபடி, ஏற்பாடு செய்து கொள்ளத் திட்டமிட்டார்கள். அடுத்தநாள் காலையிலிருந்து மூன்று பேரும் மரங்களுக்குப் பின்னால் ஒளிந்திருந்து, அங்கு வரும் ஆளைப் - பிடித்துவிடுவது என்று திட்டமிட்டுக்கொண்டார்கள்.

நேராகத்தன் குடிசை சென்ற நம்பி, அங்கே தன் அப்பா இல்லாதபடியால் மறுபடியும் மனம்போன போக்கில் குதிரையைத் தட்டிவிட்டான், கடைசியில் நகரத்தின் அருகில் வந்து விட்டான். போய்ப் பாண்டிய மன்னனிடம் இந்தச் செய்தியைக் கூற வேண்டுமென்று தோன்றியது. நேராக அரண்மனைக்குச் சென்றான்.

வாயிலில் நின்ற காவலரிடம் ‘அரசரை நம்பி பார்க்க வேண்டும்’ என்று சொல்லுங்கள் ! என்றான். “இப்பொழுது யாரும் பார்க்கமுடியாது. நாளை வா” என்று மறுத்தனர். “என்னுடைய அரசரை நான் விரும்பிய போது பார்க்க முடியாதா?” என்று கேட்டபடி வேகமாக உள்ளே நுழைந்தான் நம்பி. காவலர்கள் ஓடிவந்து அவனைப் பிடித்துக் கொண்டார்கள், அரசனை உடனே பார்க்க வேண்டும் என்றிரிந்த நம்பிக்கு இது பெரிய தடையாகப் பட்டது. அவர்களை உதறித் தள்ளிவிட்டு உள்ளே ஓடினான். அப்பொழுது என்ன சத்தம் என்று கவனிப்பதற்காக ஒரு அறையிலிருந்து எட்டிப் பார்த்த அரசர், நம்பியைப் பார்த்ததும், மகிழ்ச்சியுடன் தழுவிக் கொண்டார். “அவசரமாகப் பார்க்க வந்தால். இந்த முட்டாள்கள் தடுத்து விட்டார்கள். சண்டை செய்ய வேண்டி வந்துவிட்டது அரசே” என்று நம்பி தன் வருத்தத்தைக் கூறினான். பாண்டியன் தலையசைத்தவுடன் அந்த வீரர்கள் அகன்று விட்டனர். பிறகு “என்ன அவசர வேலையாக வந்தாய்? உனக்கென்ன வேண்டும்?” என்று அன்போடு கேட்டான் பாண்டியன். நம்பி “எனக்கொன்றும் வேண்டாம். உங்களுக்குத்தான் ஒன்று கொண்டுவந்திருக்கிறேன்” என்று மடி கொண்ட மட்டும் கட்டி வைத்திருந்த, வெள்ளி வைரம் தங்கத்தால் ஆன பொருள்களை எதிரில் கொட்டினான். “நம்பி, இதெல்லாம் ஏது?” என்று அதட்டிய குரலில் கேட்டான் அரசன். “ஓரிடத்தில் திருடிக் கொண்டு வந்தேன். அதைத் தங்களிடம் கொடுக்கவேண்டுமென்று காட்டிலிருந்து அவசரமாகப் புறப்பட்டு வத்தேன் அரசே!” என்றான் நம்பி.

பாண்டியனின் முகம் கறுத்தது. அவன் மனதில் சுழன்ற எண்ணங்கள் நம்பிக்கு எப்படித்தெரியும்? அவையெல்லாம் பாண்டியனுடைய பொருள்கள். அவை எப்படி நம்பி கைக்கு வந்தன என்று அவன் தெரிந்து கொள்ள நினைக்கவில்லை, ஆனால், மிகத்திறமையாக நம்பியே அவற்றைத் திருடிவிட்டுத் தன் திறமையை அரசனிடமே எடுத்துக்காட்ட நினைத்து விட்டான் என்று தான் பாண்டியன் நினைத்துக் கொண்டான். இப்படி நினைத்தவுடன் அவன் கண்கள் சிவந்து சுழன்றன. அங்கிருந்த மணியை ஓங்கியடித்தான். அந்தப் பழைய காவவர் இருவரும் வந்தார்கள். “நம்பி? நீ தீயோடு விளையாடுகிறாய். உனக்கு இது விளையாட்டாக இருக்கலாம். ஆனால் தீ சுட மறந்துவிடாது” என்று சொல்லிவிட்டுக் “காவலர்களே, நம்பியைச் சிறையில் வையுங்கள்” என்றான். நம்பிக்கு ஒன்றும் புரியவில்லை. “அரசே எதற்காக என்னைச் சிறையில் வைக்கிறீர்கள்?” என்று கேட்டான். “எல்லாம் நாளைக்குப் புரியும்” என்று கூறி விட்டுப் பாண்டியன் போய்விட்டான்.

பாண்டியன் வேடர் தலைவனுக்குச் செய்தி அனுப்பினான், அவன் வந்து சிறையுள்ளே ஆத்திரத்தோடு ஒன்றும் புரியாமல் நின்றுகொண்டிருந்த நம்பியைப் பார்த்தான். "டே! நம்பி, அரசர் கோபப்படும்படி ஏன் நடந்துகொண்டாய்?" என்று கேட்டான். நம்பி நடந்த விஷயத்தை எல்லாம் வரிசையாகச் சொன்னான். உடனே வேடர் தலைவன் பாண்டியனிடம் போய்க் காட்டில் குகையிருப்பதைப் பற்றிக் கூறினான்.

பாண்டியன். தன் முன் கோபத்திற்கு வருந்தி, நம்பியை விடுவித்து "நம்பி, என் முன் கோபத்தால் இப்படி நேர்ந்து விட்டது. இதை நீ மனதில் போட்டுக் கொள்ளாதே" என்றான். "அரசே. தீ அணைக்க வருபவனையும் சுடுகிறது. ஏற்ற வருபவனையும்தான் சுடுகிறது அதற்காக அதன்மேல் கோபங்கொள்ளலாமா?" என்றான். பாண்டியனுக்குச் சுருக்கென்றது.

பிறகு பாண்டியனும், வேடர் தலைவனும் 50 வீரர்களும், தம்பி வழி காட்ட அந்தக் குகையை நோக்கிச் சென்றார்கள், குகையின் அருகில் வந்தவுடன் எல்லோரும் மரங்களின் பின் மறைந்து கொண்டார்கள். நெடு நேரம் வரை யாருமே வரவில்லை. உண்மையில் அந்த மூன்று ஆசாமிகளும் வந்திருந்தார்கள், யாரும் குகைக்கு வருகிறார்களா என்று பார்ப்பதற்காக அவர்களும் ஒளிந்து கொண்டிருந்தார்கள். கடைசியாகப் பொறுமை இழந்து விட்ட நம்பி மரத்தைவிட்டு வெளியில் வந்து நேராகக் குகைச்கெதிரில் சென்று பாறையைப் புரட்டினான். அப்பொழுது திடீரென்று அந்த மூன்று பேரும் பாய்ந்து வந்து நம்பியைப் பிடித்துக் கொண்டார்கள். இதைக் கண்டவுடன், பாண்டியனும் வேடர் தலைவனும், வீரர்களும் மறைந்திருந்த மரங்களினின்றும் வெளிக்கிளம்பி அவர்கள் மூவரையும் சூழ்ந்து கொண்டார்கள். அந்த மூன்று ஆசாமிகளுக்கும் மனம் 'திக்திக்' என்று அடித்துக்கொண்டது. வீரர்கள் அந்த ஆசாமிகளைக் கைது செய்தார்கள். பாண்டியன் குகைக்குள் சென்று பார்த்தான். தன், நகரத்தில் களவு போன பொருள்கள், அரண்மனைப் பொருள்கள், இன்னும் யாராருடைய பொருள்களோ குவிந்திருந்தன. திரும்பி வந்து இந்த மூன்று ஆசாமிகளையும் பார்த்தான் பாண்டியன்.

அவர்கள் மூவருமே அவனுக்குத் தெரிந்தவர்கள்தான். தமிழ் நாட்டு ஆசாமி, ஒரு பெரிய பணக்காரன். அரசர் குலத்திற்கு மிகவும் வேண்டியவன். ஆனால் அவனுடைய பண ஆசைதான் இத்தனை பொருள்களையும் திருடிக்குவித்து வைக்கத் தூண்டி-

யிருக்கின்றது. அந்த மங்கோலியர்கள் இருவரும், வடநாட்டிலிருந்து பாண்டி நாட்டுக்குப் பிழைக்க வந்தவர்கள். அவர்கள் அந்தப் புணக்காரன் - வீட்டில் வேலைக்கமர்ந்தார்கள். கடைசியாகத் தாங்கள் கொள்ளையடிக்கும் திறமையைக் காட்டவே, பணக்காரன் அவர்கள் உ.தவியால் கொள்ளையடிக்கத் தொடங்கினான். பொருள்களில் அவர்களுக்கும் அவ்வப்போது கொள்ளையடித்துக் கொடுத்ததற்குக் கூலியாகக் கொடுத்து வந்தான்.

பாண்டிய நாட்டில் பல நாட்களாக நடைபெற்றுவந்த இந்த மாயக் கொள்ளையைப் பாண்டின் இன்றுதான் கண்டுபிடித்தான். அவர்களை அரண்மனைக்கு அழைத்துப்-போய்ச் சிறையில் அடைக்கும்படி வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அங்கிருந்த பொருள்களையெல்லாம் அரண்மனைக்குக் கொண்டுவரச் செய்தான்.

பொருளைக் காணவில்லை என்று முன் முறையிட்ட குடி மக்களை அழைத்து அவரவர்கள் பொருளைக் கொடுத்து விட்டான். தன் அரண்மனைப் பொருள்கள் எப்படித் திருட்டுப்போயின என்பது இன்னும் அவனுக்குப் புரியவில்லை. அந்த மங்கோலிய ஆசாமிகள் அந்த முறையைச் சொல்ல மறுத்து விட்டனர். செத்தாலும் சொல்ல மாட்டோம் என்று கூறி விட்டார்கள்.

நம்பி, இந்தத் துப்புத் துலக்கியத்திற்கு நன்றியாக அவனுக்கு அரண்மனைப் படையிலேயே ஒரு பெரிய வேலை கொடுத்தான் பாண்டியன். வேடர் தலைவன் உள்ளம் பூரித்துப் போனான். நம்பியும் மகிழ்ச்சியுடன், “நான் பிறந்த நாட்டுக்கும், என் அரசர்க்கும் என்னாலான நன்மைகளைச் செய்வேன்” என்றான்.

அன்று நம்பியும் பாண்டிய மன்னனும் பல்லக்கேறி ஊர்வலம் வந்தார்கள்.

மிகத் திறமையாகத் திருடியவர்களைக் கண்டுபிடித்துப் பொருளைத் திருப்பித் தந்த நம்பியை மக்கள் வாயார வாழ்த்தினார்கள். தனி ஆளாக நின்று, அந்தக் குகைக் கள்வர்களைப் பிடிக்க வழிகண்ட நம்பியை எல்லோரும் பாராட்டினார்கள்.

அன்று முதல் பாண்டிய நாட்டில் களவு அற்றுப் போய் விட்டது. மக்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

------------